TNVR090005132020

TNVR090004912020

TNVR090004652020

TNVR090001672021

TNVR090001682021

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், விருதுநகர்.
(சார்பு நீதிமன்றம், விருதுநகர்.)
முன்னிலை – திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,
தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி, விருதுநகர்.
2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை
M.C.O.P.No.185/2020, M.C.O.P.No.191/2020, M.C.O.P.No.193/2020,
M.C.O.P.No.21/2021 & M.C.O.P.No.22/2021

**M.C.O.P.No.185/2020**

முத்துராஜ் ... மனுதாரர்

/எதிர்/

1. ராஜதிலகம்
2. டிவிசனல் மேனேஜர்,
   யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்

**M.C.O.P.No.191/2020**

சீதாலெட்சுமி ... மனுதாரர்

/எதிர்/

1. ராஜதிலகம்
2. டிவிசனல் மேனேஜர்,
   யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்

**M.C.O.P.No.193/2020**

சுப்புலெட்சுமி ... மனுதாரர்

/எதிர்/

1. ராஜதிலகம்
2. டிவிசனல் மேனேஜர்,
   யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்

**M.C.O.P.No.21/2021**

குழந்தைவேலு (எ) வேலு ... மனுதாரர்

/எதிர்/

1. ராஜதிலகம்
2. டிவிசனல் மேனேஜர்,
   யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்

**M.C.O.P.No.22/2021**

லட்சுமி ... மனுதாரர்

/எதிர்/

1. ராஜதிலகம்
2. டிவிசனல் மேனேஜர்,
   யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   விருதுநகர். ... எதிர்மனுதாரர்கள்

இந்த ஐந்து வழக்குகளானது முதலில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகரில் தாக்கல் செய்யப்பட்டு, மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்கள். 98/2020, 105/2020, 108/2020, 122/2020 மற்றும் 123/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் நடவடிக்கையின்படி D.No.322, நாள். 23.01.2021 மற்றும் D.No.3943, நாள்.05.11.2020 ஆகிய தேதிய உத்தரவுகளின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்கள்.185/2020,

191/2020, 193/2020, 21/2021 மற்றும் 22/2021 என எண்ணிடப்பட்டுள்ள இம்மனுக்களானது இந்நீதிமன்றத்தின் முன்பு 10.04.2026–ம் தேதி இறுதியாக விசாரணைக்காக வந்த போது, ஐந்து மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. ரூபன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், ஐந்து மனுக்களின் 1–ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. தேவதாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

<u>**பொதுவான உத்தரவு**</u>

M.C.O.P.Nos.185/2020, 191/2020, 193/2020, 21/2021 மற்றும் 22/2021 ஆகிய ஐந்து மனுக்களின் மனுதாரர்கள் 26.02.2020–ம் தேதி இரவு 08.00 மணியளவில் மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் ஸ்டெர்லைட் ஆலையின் வடக்கு பகுதியில் SAR பெட்ரோல் பல்க் அருகில் நடந்த சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு ரூ.1,00,000/–, 10,00,000/–, 10,00,000/–, 10,00,000/– மற்றும் 10,00,000/– கோரி மேற்படி மனுக்களின் மனுதாரர்களால் இம்மனு பிரிவுகள் 140 மற்றும் 166 எம்.வி.ஆக்ட் மற்றும் விதி 3–ன்படி திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டம் 54/94–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**M.C.O.P.No.185/2020**</u>

| | | |
|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – முத்துராஜ்,<br>த.பெ. கண்ணன். |
| 3. | காயமுற்றவர் வயது | – 26/2020. |
| 4. | காயமுற்றவர் வேலை | – கூலி |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – ரூ.10,000/–ற்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 26.02.2020, இரவு சுமார் 08.00 மணியளவில். |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.1,00,000/– |

**M.C.O.P.No.191/2020**

| | | | |
|---|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – | காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – | சீதாலெட்சுமி,<br>க.பெ. ராமானுஜம். |
| 3. | காயமுற்றவர் வயது | – | 75/2020. |
| 4. | காயமுற்றவர் வேலை | – | இல்லத்தரசி. |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – | ரூ.10,000/–. |
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 26.02.2020, இரவு சுமார் 08.00 மணியளவில். |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.10,00,000/– |

**M.C.O.P.No.193/2020**

| | | | |
|---|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – | காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – | சுப்புலெட்சுமி,<br>க.பெ. ஸ்ரீனிவாசகன். |
| 3. | காயமுற்றவர் வயது | – | 45/2020. |
| 4. | காயமுற்றவர் வேலை | – | இல்லத்தரசி. |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – | ரூ.10,000/–. |
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 26.02.2020, இரவு சுமார் 08.00 மணியளவில். |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.10,00,000/– |

**M.C.O.P.No.21/2021**

| | | | |
|---|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – | காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – | குழந்தைவேலு (எ) வேலு,<br>த.பெ. மாடசாமி. |
| 3. | காயமுற்றவர் வயது | – | 67/2020. |
| 4. | காயமுற்றவர் வேலை | – | வியாபாரி. |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – | ரூ.40,000/–ற்கு மேல் |
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 26.02.2020, இரவு சுமார் 08.00 மணியளவில். |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.10,00,000/– |

**M.C.O.P.No.22/2021**

| | | | |
|---|---|---|---|
| 1. | இழப்பீடு கோருதல் | – | காயங்களுக்கு |
| 2. | காயமுற்றவர் பெயர் | – | லட்சுமி,<br>க.பெ. பாலன். |
| 3. | காயமுற்றவர் வயது | – | 57/2020. |
| 4. | காயமுற்றவர் வேலை | – | இல்லத்தரசி. |
| 5. | காயமுற்றவர் வருமானம் | – | ரூ.10,000/-. |
| 6. | விபத்து நேரிட்ட நாள், நேரம் | – | 26.02.2020, இரவு சுமார் 08.00 மணியளவில். |
| 7. | கோரப்பட்ட இழப்பீடு | – | ரூ.10,00,000/- |

**மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் சுருக்கம் : –**

**2.** மனுதாரர்கள் உறவினர்கள் ஆவர். மனுதாரர்கள் 26.02.2020-ம் தேதி இரவு 07.00 மணியளவில் 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 58 U 3207 என்ற வேனில் பயணம் செய்தனர். மேற்படி வாகனம் மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் ஸ்டெர்லைட் ஆலையின் வடக்கு பக்கத்தில் SAR பெட்ரோல் பல்க் அருகே சென்று கொண்டிருந்தபோது, 1-ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான சுமன்ராஜ் என்பவர் போக்குவரத்து விதிகளை பின்பற்றாமலும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், அதி வேகமாகவும் வேனை ஓட்டியதால் வேன் கவிழ்ந்தது. அந்த வேனில் பயணித்த மனுதாரர்களுக்கு உடல் முழுவதும் பலத்த காயங்கள் மற்றும் எலும்பு முறிவு காயங்கள் ஏற்பட்டது. உடனடியாக தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

**3.** மேற்படி விபத்து குறித்து 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது தூத்துக்குடி, சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.64/2020, பிரிவுகள் 279, 337 இ.த.ச.-வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, தூத்துக்குடி, நீதித்துறை நடுவர் எண்.III-ல் நிலுவையில் உள்ளது. காயமடைந்த முத்துராஜ்

கூலித்தொழிலாளி. காயமடைந்த சீதாலெட்சுமி, சுப்புலட்சுமி மற்றும் லட்சுமி ஆகியோர் இல்லத்தரசிகள். காயமடைந்த குழந்தைவேலு என்ற வேலு வியாபாரி. 30 மற்றும் 40 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரர்கள் பணி செய்ய வேண்டியுள்ளது. இவ்விபத்து மனுதாரர்களது இயல்பு வாழ்க்கையை முற்றிலுமாக சீர்குலைத்து விட்டது. இவ்விபத்து 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால் ஏற்பட்டது. 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம், 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களுக்கு மனுவில் கண்ட நஷ்ட ஈட்டை வழங்கக் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** 1–ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்மையால் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகளின் சுருக்கம் : –**

**5.** மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவை அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை. விபத்து நடந்த விதம் குறித்து மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதி முற்றிலும் தவறானது. 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக தவறான விவரங்கள் கூறப் பட்டுள்ளன. 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் அதிவேகமாகவும் மற்றும் கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டியதால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்பது தவறானது.

**6.** 26.02.2020–ம் தேதி இரவு 08.00 மணியளவில் வேனை அதன் ஓட்டுநர் மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கு நோக்கி சாதாரண வேகத்தில், கவனத்துடனும், எச்சரிக்கையுடனும், சாலையின்

இடதுபுறம் சென்று கொண்டிருந்தார். 1–ம் எதிர்மனுதாரரின் வேன் தூத்துக்குடி ஸ்டெர்லைட் அருகே சென்று கொண்டிருந்தபோது, ஒரு பாதசாரி திடீரென அலட்சியமாக சாலையை கடக்க முயன்றதை கவனித்த 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் பிரேக் போட்டதால் வேன் கவிழ்ந்தது. இவ்விபத்து 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் அலட்சியத்தால் ஏற்படவில்லை. எனவே, மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு 2–ம் எதிர்மனுதாரர் பொறுப்பல்ல.

**7.** 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தில் 13 நபர்கள் மட்டுமே பயணம் செய்ய முடியும். விபத்து சமயத்தில் மோட்டார் வாகன நிபந்தனைகளுக்கு எதிராக 16 நபர்களை வாகனத்தில் பயணிக்க அனுமதித்துள்ளார். 1–ம் எதிர்மனுதாரர் மோட்டார் வாகன நிபந்தனையை மீறியுள்ளார். எனவே, 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல. 1–ம் எதிர்மனுதாரர் மட்டுமே மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்பாவார். விபத்து சமயத்தில் மனுதாரர்கள் பணிபுரிந்து சம்பாதித்து வந்தார்கள் என்பது பொய்யானது. மனுதாரர்களின் வயது மற்றும் வருமானம், காயங்களின் தன்மை, சிகிச்சை மற்றும் மருத்துவச் செலவுகள் ஆகியவை ஒப்புக் கொள்ளப் படவில்லை. மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமடைந்து, மனுதாரர்களுக்கு எந்த ஊனத்தையும் ஏற்படுத்தவில்லை. எனவே, வருவாய் இழப்பு எதுவும் ஏற்படவில்லை. மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது. 2–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எவ்வித வழக்குமூலமும் இல்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**8. <u>இந்த ஐந்து மனுக்களில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் : –</u>**

1. இவ்விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது?

2. இழப்பீட்டு தொகையை யார் செலுத்த வேண்டும்?
3. M.C.O.P.No.185/2020−ல் மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?
4. M.C.O.P.No.191/2020−ல் மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?
5. M.C.O.P.No.193/2020−ல் மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?
6. M.C.O.P.No.21/2021−ல் மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?
7. M.C.O.P.No.22/2021−ல் மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**9.** M.C.O.P.No.185/2020−ல் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் ம.சா.1 முதல் ம.சா.6 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப் பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.28 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. 2−ம் எதிர்மனுதாரர் தரப்பிற்கு போதுமான கால அவகாசம் வழுங்கப்பட்டும் சாட்சியத்திற்கு முன்வராததால் 2−ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>பிரச்சனை எண்.1 : −</u>**

**10.** இந்த விபத்துக்கு 1−ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக் குறைவு தான் காரணம் என்பதை மெய்ப்பிக்க M.C.O.P.No.185/2020−ன் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். ம.சா.1 தனது சாட்சியத்தில், 26.02.2020−ம் தேதி இரவு 08.00 மணியளவில் தனது உறவினர்களுடன் TN 58 U 3207 என்ற வேனில் மதுரை − தூத்துக்குடி ரோட்டில் ஸ்டெர்லைட் ஆலை அருகே SAR பெட்ரோல் பல்க் அருகில் சென்று கொண்டிருந்தபோது, வேனை அதன் ஓட்டுநர் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று சென்டர் மீடியனில் வேகமாக மோதியதில் வேன் கவிழ்ந்து விட்டதாகவும், அதனால் வேனில் பயணம் செய்த

தங்களுக்கு பலத்த இரத்தக்காயம் மற்றும் எலும்புமுறிவு காயங்கள் ஏற்பட்டது என்றும், காயம்பட்ட தங்களை உடனடியாக தூத்துக்குடி, அரசு மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும், பின்னர் தங்களை மேல் சிகிச்சைக்காக மதுரை தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது. மேற்படி விபத்தில் காயம்பட்ட சுப்புலெட்சுமி, சீதாலெட்சுமி, லட்சுமி மற்றும் குழந்தைவேலு என்ற வேலு ஆகிய ம.சா.2 முதல் ம.சா.5 வரையான சாட்சிகள் ம.சா.1–ன் சாட்சியத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளனர்.

**11.** ம.சா.1 அவரது சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில், மேற்படி விபத்து சம்மந்தமாக தூத்துக்குடி மாவட்டம், சிப்காட், காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப் பட்டுள்ளது. ம.சா.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி விபத்து சம்மந்தமாக குழந்தைவேலு மகன் அழகர்குமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், 1–ம் எதிர்மனுதாரரின் வேன் ஓட்டுநரான சுமன்ராஜ் என்பவர் மீது தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.64/2020, பிரிவுகள் 279, 337 இ.த.ச.–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது காணமுடிகிறது. சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் ம.சா.ஆ.3–ஐ பரிசீலனை செய்கையில், சம்பவ இடமானது மதுரை – தூத்துக்குடி ரோட்டில் ஸ்டெர்லைட்டுக்கு வடக்கு பக்கம் உள்ள SAR பெட்ரோல் பங்கிற்கு சுமார் 500 மீட்டர் தூரத்தில் வடக்கு பகுதியில் உள்ள ரோட்டின் சென்டர் மீடியேட்டரில் நடந்துள்ளதாக கண்டுள்ளது. மேற்படி விபத்து சம்மந்தமாக 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான சுமன்ராஜ் என்பவர் மீது பிரிவுகள் 279, 337, 338 இ.த.ச.–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதும் ம.சா.ஆ.2–ன் மூலமாகவும், 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் சுமன்ராஜ் மேற்படி குற்றத்தை

ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளதும் ம.சா.ஆ.5–ன் மூலமாகவும் காணமுடிகிறது. எனவே, மேற்படி விபத்தானது 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>பிரச்சனை எண். 2 : –</u>**

**12.** ஏற்கனவே பிரச்சனை எண்.1–ல் விவாதிக்கப்பட்டுள்ளது போல் மேற்படி விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 58 U 3207 என்ற பதிவு எண் கொண்ட வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக் குறைவான செயலால் விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வேனில் காப்பீட்டு விதிகளின் படி 13 நபர்கள் தான் பயணம் செய்ய வேண்டும் என்றும், காப்பீட்டு விதிகளுக்கு முரணாக விபத்து சமயத்தில் மேற்படி வேனில் 16 நபர்கள் பயணம் செய்துள்ளனர் என 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்த வாதத்தை பரிசீலனை செய்கையில், விபத்து சமயத்தில் மேற்படி வேனில் 12 நபர்கள் பயணம் செய்ததாக ம.சா.1–ம், சிறு வயது குழந்தைகளையும் சேர்த்து 16 நபர்கள் பயணம் செய்ததாக ம.சா.2 முதல் ம.சா.4–ம், 12 பெரியவர்கள், 3 குழந்தைகள் மற்றும் ஓட்டுநரை சேர்த்து 16 நபர்கள் பயணம் செய்ததாக ம.சா.5–ம் சாட்சியம் அளித்துள்ளது காணமுடிகிறது. மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக மேற்படி 5 மனுக்களின் மனுதாரர்கள் மற்றும் சந்தோஷ்குமார் ஆகிய 6 நபர்களால் மட்டுமே இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**13.** 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வேனில் காப்பீட்டு விதிகளின் படி 13 நபர்கள் தான் பயணம் செய்ய வேண்டும் என்றும், காப்பீட்டு விதிகளுக்கு முரணாக விபத்து சமயத்தில் மேற்படி வேனில் 16 நபர்கள் பயணம் செய்துள்ளனர் என 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்த

வாதத்திற்கு ஆதரவாக 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மேலும், மேற்படி வேனின் காப்பீட்டு நகல் உள்ளிட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்த வாதம் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்யப்படவில்லை என இத்தீர்ப்பாயம் கருதுகிறது. 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மேற்படி வாகனமானது 2-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி 2-ம் எதிர்மனுதாரர், மேற்படி 1-ம் எதிர்மனுதாரருக்காக இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவராவர் என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>எம்.சி.ஓ.பி.எண்.185/2020</u>**

**<u>பிரச்சனை எண். 3 : -</u>**

**14.** மனுதாரர் முத்துராஜ் தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

**<u>பகுதி நிரந்தர இயலாமை : -</u>**

**15.** மனுதாரர் தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தினால் தனக்கு பலத்த இரத்தக்காயம் மற்றும் எலும்புமுறிவு காயங்கள் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ள போதும், அது குறித்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.ஆ.6 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், மனுதாரர் முத்துராஜ்-க்கு வலதுபக்க மேல் தாடை பகுதியில் 5x3 செ.மீ அளவில் வீக்கக்காயம் ஏற்பட்டுள்ளதும், தொடர்ந்து சிகிச்சை பெறாமல் மருத்துவமனையிலிருந்து வெளியேறியதால் காயம் குறித்து கருத்துரை வழங்க இயலாது என விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று வழங்கப் பட்டுள்ளது துலங்குகிறது. மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக கூறுவது குறித்து காயச்சான்று மற்றும் ஊனச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை.

ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.2 குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மனுதாரருக்கு தலையின் வலது பக்கம் வீக்கத்துடன் கூடிய சாதாரண காயம் இருந்துள்ளதும் ம.சா.ஆ.6–ன்படி வலது பக்க மேல் தாடை பகுதியில் வீக்க காயம் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டுள்ளது. மேற்கண்ட சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலமாக மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்படவில்லை என்பதும், மனுதாரருக்கு சாதாரண காயங்கள் ஏற்பட்டுள்ளதும் தெரிகிறது. எனவே, மனுதாரருக்கு மேற்படி தலைப்பின் கீழ் எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவு : –</u>**

**16.** மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக ரூ.10,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்தும், சம்பவயிடம் மற்றும் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு உள்ள தூரத்தை பொறுத்தும் மேற்படி மனுதாரருக்கு ரூ.5,000/– போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>கூடுதல் சத்துணவு செலவு : –</u>**

**17.** மனுதாரர் கூடுதல் சத்துணவு செலவிற்காக ரூ.50,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.5,000/– சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**வலி, துன்பம் : –**

**18.** மனுதாரர் வலி துன்பத்திற்காக ரூ.2,00,000/– கோரியிருந்தாலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட காயச்சான்றிதழ் ம.சா.ஆ.6–ன் படி 26.02.2020–ம் தேதி தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளார். எனவே, மேற்படி மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல் மற்றும் மன அளவில் கடுமையான வலி மற்றும் துன்பத்தை அனுபவித்திருப்பார். அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**ஆடை அணிகலன்கள் : –**

**19.** மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் வகையில் ரூ.1,000/– செலவானதாக குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எம். சின்னத்தம்பி – எதிர் – எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/– வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும், மனுதாரர் கோரிய ரூ.1,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**மருத்துவ செலவுகள் : –**

**20.** மேற்படி மனுதாரர் மருத்துவ செலவிற்காக ரூ.1,00,000/– கோரியுள்ளார். ஆனால், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக ஒரு நாள் மட்டும் சிகிச்சை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இருப்பினும், நமது மேன்மை தாங்கிய சென்னை உயர்நீதிமன்றம் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தஞ்சாவூர் எதிர் சிங்காரம் என்ற சிங்காரு மற்றும் சிலர் என்ற வழக்கில் 2014 (1) TN MAC 822 என்ற வழக்கில் கோருரிமையாளருக்கு

அவருக்கு ஏற்பட்ட மார்பு மற்றும் தலையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக 2 நாள் மற்றும் 7 நாட்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக ரூ.50,000/- வழங்கி உத்தரவிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தாலும் அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் இல்லை என்பதற்காக மருத்துவ செலவுகளை வழங்குவதை தவிர்க்க இயலாது என்று கூறியுள்ளது. எனவே, இவ்வழக்கில் மேற்படி மனுதாரர் அவரது வலதுபக்க மேல் தாடை பகுதியில் 5X3 செ.மீ. அளவில் வீக்கக்காயம் ஏற்பட்டதற்காக ஒரு நாள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்துள்ளார். எனவே, அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.5,000/- வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர இயலாமைக்காக | - | -- |
| 2. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | - | ரூ.5,000/- |
| 3. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு செலவிற்காக | - | ரூ5,000/- |
| 4. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பத்திற்காக | - | ரூ.20,000/- |
| 5. | மனுதாரருக்கு விபத்தின் போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | - | ரூ1,000/- |
| 6. | மருத்துவ செலவுகளுக்காக | - | ரூ.5,000/- |
| | ஆக மொத்தம் | - | ரூ.36,000/- |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.36,000/- இழப்பீடு தொகையாக

கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**எம்.சி.ஓ.பி.எண்.191/2020**

**பிரச்சனை எண். 4 : –**

**21.** மனுதாரர் சீதாலெட்சுமி தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

**பகுதி நிரந்தர இயலாமை : –**

**22.** மனுதாரர் சீதாலெட்சுமி ம.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.3 தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தினால் தனக்கு பலத்த இரத்தக் காயம் மற்றும் எலும்புமுறிவு காயங்கள் ஏற்பட்டதாகவும், விபத்திற்கு பின்னர் தன்னால் சாதாரண வேலையை கூட செய்ய முடியாது என்றும், விபத்து தனது வாழ்க்கையை சீர்குலைத்து விட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.16 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், இடது நெற்றி பகுதியில் 5x2x1 செ.மீ. அளவில் ஒரு வெட்டுக்காயமும், கழுத்தில் V வடிவில் 2x1x0.5 செ.மீ. அளவில் ஒரு வெட்டுக்காயமும், நெஞ்சுப்பகுதியில் தொடும்போது வலி இருப்பதும், மேற்படி காயங்கள் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கப்பட்டுள்ளதும் துலங்குகிறது. மேலும், மேற்படி மனுதாரர் மருத்துவ குழு முன்பு ஆஜராகியுள்ளார். மேற்படி மருத்துவ குழுவின் அறிக்கையானது ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அவருக்கு 35% பகுதி நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரின் வயது மற்றும் பணியை பொறுத்து ஒவ்வொரு சதவீதத்திற்கும் ரூ.7,000/– என்று தீர்மானித்து 35% ஊனத்திற்காக இழப்பீட்டு தொகையானது ரூ.2,45,000/– (7,000 X 35) என்று தீர்மானிக்கப்படுகிறது.

**போக்குவரத்து செலவு : –**

**23.** மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக ரூ.10,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்தும், சம்பவயிடம் மற்றும் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு உள்ள தூரத்தை பொறுத்தும் மேற்படி மனுதாரருக்கு ரூ.5,000/– போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**கூடுதல் சத்துணவு செலவு : –**

**24.** மனுதாரர் கூடுதல் சத்துணவு செலவிற்காக ரூ.1,00,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.10,000/– சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**வலி, துன்பம் : –**

**25.** மனுதாரர் வலி துன்பத்திற்காக ரூ.3,00,000/– கோரியிருந்தாலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட காயச்சான்றிதழ் ம.சா.ஆ.16–ன் படி 26.02.2020–ம் தேதி முதல் 03.03.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளார். எனவே, மேற்படி மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல் மற்றும் மன அளவில் கடுமையான வலி மற்றும் துன்பத்தை அனுபவித்திருப்பார். அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**ஆடை அணிகலன்கள் : –**

**26.** மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் வகையில் ரூ.1,000/– செலவானதாக குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எம். சின்னத்தம்பி – எதிர் – எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/– வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும், மனுதாரர் கோரிய ரூ.1,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**உடன் இருந்தோர்க்கான செலவுகள் : –**

**27.** மனுதாரர் கடந்த 26.02.2020–ம் தேதி முதல் 03.03.2020–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், தன்னால் சாதாரண வேலைகூட செய்ய முடியவில்லை என்று சொல்லியிருந்தாலும், மனுதாரர் சிகிச்சை பெற்ற சமயத்திலும், அதற்கு பின்னரும் தனது உதவிக்காக ஆட்கள் யாரையும் வைத்துக் கொண்டதாகவோ அல்லது அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரர் சிகிச்சையில் இருந்த காலத்தில் அவருக்கு உதவியாக அவரது குடும்பத்தினர் யாரேனும் உடன் இருந்திருப்பர். எனவே, மேற்படி மனுதாரர் கடந்த 26.02.2020–ம் தேதி முதல் 03.03.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த காலமான 7 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் மொத்தம் ரூ.1,400/– (200x7) வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**மருத்துவ செலவுகள் : –**

**28.** மேற்படி மனுதாரர் மருத்துவ செலவிற்காக ரூ.3,00,000/– கோரியுள்ளார். ஆனால், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக 7 நாட்கள்

சிகிச்சை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இருப்பினும், நமது மேன்மை தாங்கிய சென்னை உயர்நீதிமன்றம் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தஞ்சாவூர் எதிர் சிங்காரம் என்ற சிங்காரு மற்றும் சிலர் என்ற வழக்கில் 2014 (1) TN MAC 822 என்ற வழக்கில் கோருரிமையாளருக்கு அவருக்கு ஏற்பட்ட மார்பு மற்றும் தலையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக 2 நாள் மற்றும் 7 நாட்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக ரூ.50,000/– வழங்கி உத்தரவிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தாலும் அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் இல்லை என்பதற்காக மருத்துவ செலவுகளை வழங்குவதை தவிர்க்க இயலாது என்று கூறியுள்ளது. எனவே, இவ்வழக்கில் மேற்படி மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதற்காக 7 நாட்கள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்துள்ளார். எனவே, அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர இயலாமைக்காக | – | ரூ.2,45,000/– |
| 2. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | – | ரூ.5,000/– |
| 3. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு செலவிற்காக | – | ரூ.10,000/– |
| 4. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பத்திற்காக | – | ரூ.20,000/– |
| 5. | மனுதாரருக்கு விபத்தின்போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | – | ரூ.1,000/– |

| | | | |
|---|---|---|---|
| 6. | மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் அவருக்கு உடன் இருந்தோர்க்கான செலவுகளுக்காக | – | ரூ.1,400/– |
| 7. | மருத்துவ செலவுகளுக்காக | – | ரூ.20,000/– |
| | ஆக மொத்தம் | – | ரூ.3,02,400/– |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.3,02,400/– இழப்பீடு தொகையாக கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**எம்.சி.ஓ.பி.எண்.193/2020**

**பிரச்சனை எண். 5 : –**

**29.** மனுதாரர் சுப்புலெட்சுமி தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

**பகுதி நிரந்தர இயலாமை : –**

**30.** மனுதாரர் சுப்புலெட்சுமி ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.2 தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தினால் தனக்கு பலத்த இரத்தக் காயம் மற்றும் எலும்புமுறிவு காயங்கள் ஏற்பட்டதாகவும், விபத்திற்கு பின்னர் எந்த ஒரு வேலைக்கும் செல்ல முடியவில்லை என்றும், தன்னால் சாதாரண வேலையை கூட செய்ய முடியாது என்றும், விபத்து தனது வாழ்க்கையை சீர்குலைத்து விட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், நெற்றியின் மையப்பகுதியில் 2x2x1 செ.மீ. அளவில் ஒரு வெட்டுக்காயமும், இடது கன்ன எலும்பு பகுதியில் 5 செ.மீ. அளவில் ஒரு சிராய்ப்பு காயமும் உள்ளதாகவும், மேற்படி காயங்கள் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கப் பட்டுள்ளதும் துலங்குகிறது. மேலும், மேற்படி மனுதாரர் மருத்துவ குழு முன்பு

ஆஜராகியுள்ளார். மேற்படி மருத்துவ குழுவின் அறிக்கையானது ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அவருக்கு 33% பகுதி நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரின் வயது மற்றும் பணியை பொறுத்து ஒவ்வொரு சதவீதத்திற்கும் ரூ.7,000/− என்று தீர்மானித்து 33% ஊனத்திற்காக இழப்பீட்டு தொகையானது ரூ.2,31,000/− (7000 X 33) என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவு : −</u>**

**31.** மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக ரூ.10,000/− கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்தும், சம்பவயிடம் மற்றும் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு உள்ள தூரத்தை பொறுத்தும் மேற்படி மனுதாரருக்கு ரூ.5,000/− போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>கூடுதல் சத்துணவு செலவு : −</u>**

**32.** மனுதாரர் கூடுதல் சத்துணவு செலவிற்காக ரூ.1,00,000/− கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.10,000/− சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>வலி, துன்பம் : −</u>**

**33.** மனுதாரர் வலி துன்பத்திற்காக ரூ.3,00,000/− கோரியிருந்தாலும்,

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட காயச்சான்றிதழ் ம.சா.ஆ.11–ன் படி 26.02.2020–ம் தேதி முதல் 01.03.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளார். எனவே, மேற்படி மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல் மற்றும் மன அளவில் கடுமையான வலி மற்றும் துன்பத்தை அனுபவித்திருப்பார். அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**ஆடை அணிகலன்கள் : –**

**34.** மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் வகையில் ரூ.1,000/– செலவானதாக குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எம். சின்னத்தம்பி – எதிர் – எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/– வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும், மனுதாரர் கோரிய ரூ.1,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**உடன் இருந்தோர்க்கான செலவுகள் : –**

**35.** மனுதாரர் கடந்த 26.02.2020–ம் தேதி முதல் 01.03.2020–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், தன்னால் சாதாரண வேலைகூட செய்ய முடியவில்லை என்று சொல்லியிருந்தாலும், மனுதாரர் சிகிச்சை பெற்ற சமயத்திலும், அதற்கு பின்னரும் தனது உதவிக்காக ஆட்கள் யாரையும் வைத்துக் கொண்டதாகவோ அல்லது அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரர் சிகிச்சையில் இருந்த காலத்தில் அவருக்கு உதவியாக அவரது குடும்பத்தினர் யாரேனும் உடன் இருந்திருப்பர். எனவே, மேற்படி மனுதாரர் கடந்த 26.02.2020–ம் தேதி முதல் 01.03.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக

சிகிச்சை பெற்று வந்த காலமான 5 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் மொத்தம் ரூ.1,000/– (200x5) வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**மருத்துவ செலவுகள் : –**</u>

**36.** மேற்படி மனுதாரர் மருத்துவ செலவிற்காக ரூ.3,00,000/– கோரியுள்ளார். ஆனால், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக 5 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இருப்பினும், நமது மேன்மை தாங்கிய சென்னை உயர்நீதிமன்றம் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தஞ்சாவூர் எதிர் சிங்காரம் என்ற சிங்காரு மற்றும் சிலர் என்ற வழக்கில் 2014 (1) TN MAC 822 என்ற வழக்கில் கோருரிமையாளருக்கு அவருக்கு ஏற்பட்ட மார்பு மற்றும் தலையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக 2 நாள் மற்றும் 7 நாட்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக ரூ.50,000/– வழங்கி உத்தரவிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தாலும் அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் இல்லை என்பதற்காக மருத்துவ செலவுகளை வழங்குவதை தவிர்க்க இயலாது என்று கூறியுள்ளது. எனவே, இவ்வழக்கில் மேற்படி மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதற்காக 5 நாட்கள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்துள்ளார். எனவே, அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர இயலாமைக்காக – | ரூ.2,31,000/– |
| 2. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் – | ரூ.5,000/– |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | | |
| 3. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு செலவிற்காக | – | ரூ.10,000/– |
| 4. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பத்திற்காக | – | ரூ.20,000/– |
| 5. | மனுதாரருக்கு விபத்தின்போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | – | ரூ.1,000/– |
| 6. | மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் அவருக்கு உடன் இருந்தோர்க்கான செலவுகளுக்காக | – | ரூ.1,000/– |
| 7. | மருத்துவ செலவுகளுக்காக | – | ரூ.20,000/– |
| | ஆக மொத்தம் | – | ரூ.2,88,000/– |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.2,88,000/– இழப்பீடு தொகையாக கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**எம்.சி.ஓ.பி.எண்.21/2021**

**பிரச்சனை எண். 6 : –**

**37.** மனுதாரர் குழந்தைவேலு (எ) வேலு தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

**பகுதி நிரந்தர இயலாமை : –**

**38.** மனுதாரர் குழந்தைவேலு (எ) வேலு ம.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.5 தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தினால் தனக்கு பலத்த இரத்தக்காயம் மற்றும் எலும்புமுறிவு காயங்கள் ஏற்பட்டதாகவும், விபத்திற்கு பின்னர் எந்த ஒரு வேலைக்கும் செல்ல முடியவில்லை என்றும்,

தன்னால் சாதாரண வேலையை கூட செய்ய முடியாது என்றும், விபத்து தனது வாழ்க்கையை சீர்குலைத்து விட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.25 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், கழுத்தில் வலி, இருபுறமும் இடுப்புவலி, இடது கண்ணுக்கு அருகில் 2x1x1 செ.மீ. அளவில் வெட்டுக்காயமும், இடது கண்ணுக்கு அருகில் 3x2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயமும், நெற்றியின் பக்கவாட்டில் 4x4 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயமும் உள்ளதாகவும், மேற்படி காயங்கள் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கப்பட்டுள்ளதும் துலங்குகிறது. மேலும், மேற்படி மனுதாரர் மருத்துவ குழு முன்பு ஆஜராகியுள்ளார். மேற்படி மருத்துவ குழுவின் அறிக்கையானது ம.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஊனத்தின் அளவு குறிப்பிடப் படவில்லை. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 குற்ற இறுதி அறிக்கை மற்றும் காயச்சான்று ம.சா.ஆ.25 ஆகியவற்றின் அடிப்படையில் மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது காணமுடிகிறது. மேற்கண்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக மனுதாரருக்கு தலையில் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது அறிய முடிகிறது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு ஊனத்தின் அளவு 10% சதவீதம் என இந்நீதிமன்றம் நிர்ணயம் செய்கிறது. மேற்படி மனுதாரரின் வயது மற்றும் பணியை பொறுத்து ஒவ்வொரு சதவீதத்திற்கும் ரூ.7,000/- என்று தீர்மானித்து 10% ஊனத்திற்காக இழப்பீட்டு தொகையானது ரூ.70,000/- (7000 x 10) என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>போக்குவரத்து செலவு : -</u>

**39.** மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக ரூ.10,000/- கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி மனுதாரருக்கு

ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்தும், சம்பவயிடம் மற்றும் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு உள்ள தூரத்தை பொறுத்தும் மேற்படி மனுதாரருக்கு ரூ.5,000/– போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**கூடுதல் சத்துணவு செலவு : –**</u>

**40.** மனுதாரர் கூடுதல் சத்துணவு செலவிற்காக ரூ.1,00,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.10,000/– சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**வலி, துன்பம் : –**</u>

**41.** மனுதாரர் வலி துன்பத்திற்காக ரூ.3,00,000/– கோரியிருந்தாலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட காயச்சான்றிதழ் ம.சா.ஆ.25–ன் படி 26.02.2020–ம் தேதி முதல் 23.03.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளார். எனவே, மேற்படி மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல் மற்றும் மன அளவில் கடுமையான வலி மற்றும் துன்பத்தை அனுபவித்திருப்பார். அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**ஆடை அணிகலன்கள் : –**</u>

**42.** மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் வகையில் ரூ.1,000/– செலவானதாக குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை. எம். சின்னத்தம்பி – எதிர் – எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/– வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும், மனுதாரர் கோரிய ரூ.1,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>உடன் இருந்தோர்க்கான செலவுகள் : –</u>

**43.** மனுதாரர் கடந்த 26.02.2020–ம் தேதி முதல் 23.03.2020–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், தன்னால் சாதாரண வேலைகூட செய்ய முடியவில்லை என்று சொல்லியிருந்தாலும், மனுதாரர் சிகிச்சை பெற்ற சமயத்திலும், அதற்கு பின்னரும் தனது உதவிக்காக ஆட்கள் யாரையும் வைத்துக் கொண்டதாகவோ அல்லது அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரர் சிகிச்சையில் இருந்த காலத்தில் அவருக்கு உதவியாக அவரது குடும்பத்தினர் யாரேனும் உடன் இருந்திருப்பர். எனவே, மேற்படி மனுதாரர் கடந்த 26.02.2020–ம் தேதி முதல் 23.03.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த காலமான 27 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் மொத்தம் ரூ.5,400/– (200x27) வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>மருத்துவ செலவுகள் : –</u>

**44.** மேற்படி மனுதாரர் மருத்துவ செலவிற்காக ரூ.3,00,000/– கோரியுள்ளார். ஆனால், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக 27 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இருப்பினும், நமது மேன்மை தாங்கிய சென்னை உயர்நீதிமன்றம் நேசனல் இன்சூரன்ஸ்

கம்பெனி லிமிடெட், தஞ்சாவூர் எதிர் சிங்காரம் என்ற சிங்காரு மற்றும் சிலர் என்ற வழக்கில் 2014 (1) TN MAC 822 என்ற வழக்கில் கோருரிமையாளருக்கு அவருக்கு ஏற்பட்ட மார்பு மற்றும் தலையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக 2 நாள் மற்றும் 7 நாட்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக ரூ.50,000/– வழங்கி உத்தரவிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தாலும் அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் இல்லை என்பதற்காக மருத்துவ செலவுகளை வழங்குவதை தவிர்க்க இயலாது என்று கூறியுள்ளது. எனவே, இவ்வழக்கில் மேற்படி மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதற்காக 27 நாட்கள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்துள்ளார். எனவே, அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.20,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர இயலாமைக்காக | – | ரூ.70,000/– |
| 2. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | – | ரூ.5,000/– |
| 3. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு செலவிற்காக | – | ரூ.10,000/– |
| 4. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பத்திற்காக | – | ரூ.20,000/– |
| 5. | மனுதாரருக்கு விபத்தின்போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | – | ரூ.1,000/– |
| 6. | மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் அவருக்கு உடன் இருந்தோர்க்கான | – | ரூ.5,400/– |

செலவுகளுக்காக

| | | | |
|---|---|---|---|
| 7. | மருத்துவ செலவுகளுக்காக | – | ரூ.20,000/– |
| | ஆக மொத்தம் | – | ரூ.1,31,400/– |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.1,31,400/– இழப்பீடு தொகையாக கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**எம்.சி.ஓ.பி.எண்.22/2021**

**பிரச்சனை எண். 7 : –**

**45.** மனுதாரர் லட்சுமி தனது கோரிக்கை மனுவில் பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரியுள்ளதால் வசதிக்காக அவை தனித்தனியாக விவரிக்கப்படுகிறது.

**பகுதி நிரந்தர இயலாமை : –**

**46.** மனுதாரர் லட்சுமி ம.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ம.சா.4 தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தினால் தனக்கு பலத்த இரத்தக் காயம் மற்றும் எலும்புமுறிவு காயங்கள் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ள போதும், அது குறித்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ம.சா.ஆ.20 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், மனுதாரர் லட்சுமிக்கு தலைப்பகுதியில் 5x2x1 செ.மீ. அளவில் கிழிந்த காயம் ஏற்பட்டுள்ளதாக காயச்சான்று வழங்கப்பட்டுள்ளது துலங்குகிறது. மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக கூறுவது குறித்து காயச்சான்று மற்றும் ஊனச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.2 குற்ற இறுதி அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மனுதாரருக்கு தலையில் சாதாரண காயம் இருந்துள்ளதும் ம.சா.ஆ.20–ன்படி தலைப்பகுதியில் கிழிந்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டுள்ளது. மேற்கண்ட சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலமாக மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்படவில்லை

என்பதும், மனுதாரருக்கு சாதாரண காயங்கள் ஏற்பட்டுள்ளதும் தெரிகிறது. எனவே, மனுதாரருக்கு மேற்படி தலைப்பின் கீழ் எவ்வித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>போக்குவரத்து செலவு : –</u>**

**47.** மனுதாரரை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற செலவிற்காக ரூ.10,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்தும், சம்பவயிடம் மற்றும் சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு உள்ள தூரத்தை பொறுத்தும் மேற்படி மனுதாரருக்கு ரூ.5,000/– போக்குவரத்து செலவாக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>கூடுதல் சத்துணவு செலவு : –</u>**

**48.** மனுதாரர் கூடுதல் சத்துணவு செலவிற்காக ரூ.1,00,000/– கோரியிருந்தாலும், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை காரணமாகவும், விரைவாக நலம் பெரும் பொருட்டு அவருக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுவது என்பது அவசியமானதாகும் என்பதால் மனுதாரருக்கு ரூ.5,000/– சத்துணவு செலவிற்காக வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

**<u>வலி, துன்பம் : –</u>**

**49.** மனுதாரர் வலி துன்பத்திற்காக ரூ.3,00,000/– கோரியிருந்தாலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட காயச்சான்றிதழ் ம.சா.ஆ.20–ன் படி 26.02.2020–ம் தேதி முதல் 29.02.2020–ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக

சிகிச்சை பெற்றுள்ளார். எனவே, மேற்படி மனுதாரர் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் உடல் மற்றும் மன அளவில் கடுமையான வலி மற்றும் துன்பத்தை அனுபவித்திருப்பார். அதனால் ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.20,000/— வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**ஆடை அணிகலன்கள் : —**</u>

**50.** மேற்படி மனுதாரர் ஆடை அணிகலன் வகையில் ரூ.1,000/— செலவானதாக குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எம். சின்னத்தம்பி — எதிர் — எஸ். தீபா மற்றும் ஒருவர் 2020(1) TNMAC 617 என்ற வழக்கில் ஆடைகளுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்காக ரூ.3,000/— வரை வழங்கலாம் என்று கூறியிருந்தாலும், மனுதாரர் கோரிய ரூ.1,000/— வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>**உடன் இருந்தோர்க்கான செலவுகள் : —**</u>

**51.** மனுதாரர் கடந்த 26.02.2020—ம் தேதி முதல் 29.02.2020—ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், தன்னால் சாதாரண வேலைகூட செய்ய முடியவில்லை என்று சொல்லியிருந்தாலும், மனுதாரர் சிகிச்சை பெற்ற சமயத்திலும், அதற்கு பின்னரும் தனது உதவிக்காக ஆட்கள் யாரையும் வைத்துக் கொண்டதாகவோ அல்லது அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும், மனுதாரர் சிகிச்சையில் இருந்த காலத்தில் அவருக்கு உதவியாக அவரது குடும்பத்தினர் யாரேனும் உடன் இருந்திருப்பர். எனவே, மேற்படி மனுதாரர் கடந்த 26.02.2020—ம் தேதி முதல் 29.02.2020—ம் தேதி வரை தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த காலமான 4 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/— வீதம் மொத்தம் ரூ.800/— (200x4) வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

<u>மருத்துவ செலவுகள் : –</u>

**52.** மேற்படி மனுதாரர் மருத்துவ செலவிற்காக ரூ.3,00,000/– கோரியுள்ளார். ஆனால், மேற்படி மனுதாரர் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர் தூத்துக்குடி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக 4 நாட்கள் சிகிச்சை எடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இருப்பினும், நமது மேன்மை தாங்கிய சென்னை உயர்நீதிமன்றம் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தஞ்சாவூர் எதிர் சிங்காரம் என்ற சிங்காரு மற்றும் சிலர் என்ற வழக்கில் 2014 (1) TN MAC 822 என்ற வழக்கில் கோருரிமையாளருக்கு அவருக்கு ஏற்பட்ட மார்பு மற்றும் தலையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக 2 நாள் மற்றும் 7 நாட்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக ரூ.50,000/– வழங்கி உத்தரவிட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தாலும் அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான ஆவணங்கள் இல்லை என்பதற்காக மருத்துவ செலவுகளை வழங்குவதை தவிர்க்க இயலாது என்று கூறியுள்ளது. எனவே, இவ்வழக்கில் மேற்படி மனுதாரருக்கு சாதாரணகாயம் ஏற்பட்டதற்காக 4 நாட்கள் உள்நோயாளியாக சிசிச்சையில் இருந்துள்ளார். எனவே, அவருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.5,000/– வழங்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட செலவுகள் குறித்து விபத்து நஷ்டஈடு கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர இயலாமைக்காக | – | –– |
| 2. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட போக்குவரத்து செலவிற்காக | – | ரூ.5,000/– |
| 3. | மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது கூடுதல் சத்துணவு | – | ரூ.5,000/– |

| | | | |
|---|---|---|---|
| | செலவிற்காக | | |
| 4. | மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஏற்பட்ட வலி, துன்பத்திற்காக | – | ரூ.20,000/– |
| 5. | மனுதாரருக்கு விபத்தின்போது ஏற்பட்ட ஆடை அணிகலன்களுக்காக | – | ரூ.1,000/– |
| 6. | மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் அவருக்கு உடன் இருந்தோர்க்கான செலவுகளுக்காக | – | ரூ.800/– |
| 7. | மருத்துவ செலவுகளுக்காக | – | ரூ.5,000/– |
| | ஆக மொத்தம் | – | ரூ.36,800/– |

மேற்படி கணக்கீட்டின்படி மனுதாரருக்கு ரூ.36,800/– இழப்பீடு தொகையாக கிடைக்கக்கூடியது என்று இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>எம்.சி.ஓ.பி.எண்.185/2020</u>**

முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.36,000/–ஐயும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த காலத்தை தவிர) செலுத்த வேண்டும் என்றும், மேதகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய Parminder Singh Vs. Honey Goyal and others (S.L.P. No.4488 of 2020) dated 18.03.2025 என்ற முன்தீர்ப்பின்படி 2–ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மேற்படி இழப்பீட்டு தொகையை நேரடியாக மனுதாரர் வங்கி கணக்கான Tamilnad Mercantile Bank, Mallankinaru branch, Account No.520100050600189, IFSC Code : TMBL0000520 MICR Code : 626060311–ல் NEFT / RTGS மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்திய பின் வங்கி அட்வைஸை இந்த

தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கு அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும். 2-ம் எதிர்மனுதாரரால் தொகை செலுத்திய பின்பு மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,500/-.

<u>எம்.சி.ஓ.பி.எண்.191/2020</u>

முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.3,02,400/-ஐயும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த காலத்தை தவிர) செலுத்த வேண்டும் என்றும், மேதகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய Parminder Singh Vs. Honey Goyal and others (S.L.P. No.4488 of 2020) dated 18.03.2025 என்ற முன்தீர்ப்பின்படி 2-ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மேற்படி இழப்பீட்டு தொகையை நேரடியாக மனுதாரர் வங்கி கணக்கான Tamilnadu Grama Bank, Muthuramalingapuram branch, Account No.10062040980, IFSC Code : IDIB0PLB001 MICR Code : 626423316-ல் NEFT / RTGS மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்திய பின் வங்கி அட்வைஸை இந்த தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கு அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும். 2-ம் எதிர்மனுதாரரால் தொகை செலுத்திய பின்பு மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற கட்டணம் அதிகமாக

செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.9,048/-.

**<u>எம்.சி.ஓ.பி.எண்.193/2020</u>**

முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.2,88,000/-ஐயும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த காலத்தை தவிர) செலுத்த வேண்டும் என்றும், மேதகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய Parminder Singh Vs. Honey Goyal and others (S.L.P. No.4488 of 2020) dated 18.03.2025 என்ற முன்தீர்ப்பின்படி 2-ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மேற்படி இழப்பீட்டு தொகையை நேரடியாக மனுதாரர் வங்கி கணக்கான Tamilnadu Grama Bank, Mallankinar Branch Account No.10060874372, IFSC Code : IDIB0PLB001 MICR Code : 626423314-ல் NEFT / RTGS மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்திய பின் வங்கி அட்வைஸை இந்த தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கு அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும். 2-ம் எதிர்மனுதாரரால் தொகை செலுத்திய பின்பு மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.8,760/-.

**<u>எம்.சி.ஓ.பி.எண்.21/2021</u>**

முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.131,400/-ஐயும், அத்தொகைக்கு

மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த காலத்தை தவிர) செலுத்த வேண்டும் என்றும், மேதகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய Parminder Singh Vs. Honey Goyal and others (S.L.P. No.4488 of 2020) dated 18.03.2025 என்ற முன்தீர்ப்பின்படி 2–ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மேற்படி இழப்பீட்டு தொகையை நேரடியாக மனுதாரர் வங்கி கணக்கான Indian Bank, Inderpuri branch, Account No.6340996917, IFSC Code : IDIB000C139 MICR Code : 110019068–ல் NEFT / RTGS மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்திய பின் வங்கி அட்வைஸை இந்த தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கு அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும். 2–ம் எதிர்மனுதாரரால் தொகை செலுத்திய பின்பு மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.5,628/–.

<u>எம்.சி.ஓ.பி.எண்.22/2021</u>

முடிவாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.36,800/–ஐயும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் (மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் அந்த காலத்தை தவிர) செலுத்த வேண்டும் என்றும், மேதகு இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய Parminder Singh Vs. Honey Goyal and others (S.L.P. No.4488 of 2020) dated 18.03.2025 என்ற முன்தீர்ப்பின்படி 2–ம்

எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் மேற்படி இழப்பீட்டு தொகையை நேரடியாக மனுதாரர் வங்கி கணக்கான State Bank of India, Mallankinaru branch, Account No.39725655377, IFSC Code : SBIN0012760 MICR Code : 626002018–ல் NEFT / RTGS மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்திய பின் வங்கி அட்வைஸை இந்த தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கு அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும். 2–ம் எதிர்மனுதாரரால் தொகை செலுத்திய பின்பு மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும், நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,500/–.

இந்த பொதுவான உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

BALAMURUGAN Digitally signed by BALAMURUGAN

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : –</u>**

ம.சா.1 – திரு. முத்துராஜ்
ம.சா.2 – திருமதி. சுப்புலெட்சுமி
ம.சா.3 – திருமதி. சீதாலெட்சுமி
ம.சா.4 – திருமதி. லட்சுமி
ம.சா.5 – திரு. குழந்தை வேலு (எ) வேலு
ம.சா.6 – திருமதி. பூங்கொடி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : –</u>**

ம.சா.ஆ.1 : முதல் தகவல் அறிக்கை – சான்றிட்ட நகல்

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | : | குற்ற இறுதி அறிக்கை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | : | பார்வை மகஜர் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | : | மோட்டார் வாகன ஆய்வறிக்கை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | : | STC.No.205/2022–ன் தீர்ப்புரை – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | : | ம.சா.1–ன் காயச்சான்று – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | : | ம.சா.1–ன் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.8 | : | ம.சா.1–ன் பான்கார்டு – நகல் |
| ம.சா.ஆ.9 | : | ம.சா.1–ன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் – நகல் |
| ம.சா.ஆ.10 | : | ம.சா.2–ன் ஊனச்சான்றிதழ் – அசல் |
| ம.சா.ஆ.11 | : | ம.சா.2–ன் காயச்சான்று – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | : | ம.சா.2–ன் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.13 | : | ம.சா.2–ன் பான்கார்டு – நகல் |
| ம.சா.ஆ.14 | : | ம.சா.2–ன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் – நகல் |
| ம.சா.ஆ.15 | : | ம.சா.3–ன் ஊனச்சான்றிதழ் – அசல் |
| ம.சா.ஆ.16 | : | ம.சா.3–ன் காயச்சான்று – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.17 | : | ம.சா.3–ன் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.18 | : | ம.சா.3–ன் பான்கார்டு – நகல் |
| ம.சா.ஆ.19 | : | ம.சா.3–ன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் – நகல் |
| ம.சா.ஆ.20 | : | ம.சா.4–ன் காயச்சான்று – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.21 | : | ம.சா.4–ன் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.22 | : | ம.சா.4–ன் பான்கார்டு – நகல் |
| ம.சா.ஆ.23 | : | ம.சா.4–ன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் – நகல் |
| ம.சா.ஆ.24 | : | ம.சா.5–ன் ஊனச்சான்றிதழ் – அசல் |
| ம.சா.ஆ.25 | : | ம.சா.5–ன் காயச்சான்று – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.26 | : | ம.சா.5–ன் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.27 | : | ம.சா.5–ன் பான்கார்டு – நகல் |
| ம.சா.ஆ.28 | : | ம.சா.5–ன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் – நகல் |

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : –</u>**

இல்லை.

BALAMURUGAN Digitally signed by BALAMURUGAN

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

**சார்பு நீதிமன்றம், விருதுநகர்.**
எம்.சி.ஓ.பி.எண்.185/2020,
எம்.சி.ஓ.பி.எண்.191/2020,
எம்.சி.ஓ.பி.எண்.193/2020,
எம்.சி.ஓ.பி.எண்.21/2021,
மற்றும்
எம்.சி.ஓ.பி.எண்.22/2021
**சீரான உத்தரவு**
நாள்.17.04.2026